
**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14.11.2025 அன்று சிவகங்கை மாவட்டத்தில், கலந்துகொண்ட அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.**

● காரைக்குடி அழகப்பா அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் நடந்த ’குழந்தைகள் தின’ நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மாநிலம் முழுவதும் 5,34,000 மாணவ, மாணவிகளுக்கு ரூ.241 கோடி மதிப்பிலான மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியைக் காணொளி வாயிலாகத் தொடங்கிவைத்து, சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த 11 ஆயிரத்து 449 மாணவர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.





● சிவகங்கை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அரசு நலத் திட்டப் பணிகள் குறித்தான ஆய்வுக் கூட்டத்தை தலைமையேற்று நடத்தினார்.






● மறைந்த பெரியார் பெருந்தொண்டர் இராம.சுப்பையா அவர்களின் 118-வது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு சிலையை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

## சிவகங்கை மாவட்டத்தில்

# அனைத்து துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

*சிவகங்கை,நவ.15-*

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (14.11.2025) சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் திருமதி லஷ்மி வளர் தமிழ் நூலக கூட்டரங்கத்தில், சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான மகளிர் விடியல் பயணத்திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண், தமிழ்புதல்வன், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் கனவு இல்லம், மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், உங்களுடன் ஸ்டாலின் திட்டம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், குடிநீர் திட்டப் பணிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட அனைத்து துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

சிவகங்கை மாவட்டத்தில் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் 1,14,527 மாணவ, மாணவிகள் பயன்பெற்று உள்ளனர். மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் இதுவரை மொத்தம் 4,22,970 நபர்களுக்கு தொடர் சிகிச்சை மற்றும் மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுப்பதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48 திட்டத்தின்கீழ் 11,471 நபர்களுக்கு 9.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் காக்கப்பட்டுள்ளனர்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டத்தில் 7.5.2021 முதல் இன்று வரை 57,610 நபர்களுக்கு 53.87 கோடி ரூபாய் செலவில் உயிர் காக்கும் உயர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 1,741 பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட பணியாணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 906 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நம்முடைய அரசு பொறுப்பேற்ற இந்த நான்கரை ஆண்டுகளில் பல்வேறு முற்போக்கு திட்டங்கள் மூலம் பெருவாரியான மக்களின் நம்பிக்கையை பெற்று வருகின்றது. மக்களும் பயனடைந்து வருகின்றார்கள்.

குறிப்பாக பெண்களை, மாணவர்களை, சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை மனதில் கொண்டு விடியல் பயணத்திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், நான் முதல்வன் என்று பல்வேறு திட்டங்களின் மூலம் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த திட்டங்களில் விடுபட்ட தகுதியான பயனாளிகளை கண்டறிந்து அவர்களுக்கும் இந்த திட்டங்களுடைய பயன் சென்று சேருகின்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடத்த உத்தரவிட்டிருந்தார்கள். மாநிலம் முழுவதும் மிகச் சிறப்பாக இந்த முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன. இம்முகாம்களில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சம்மந்தப்பட்ட பயனாளிகளுக்கான நலத்திட்டங்களை அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்டு எளிமையான நிகழ்ச்சிகள் நடத்தி அந்த நலத்திட்டங்களை எல்லாம் பொதுமக்களுக்கு வழங்குமாறு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள்.

பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கும், அவர்களின் நலவாழ்வுக்கான நலன் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்களை சுகாதாரத்துறையின் மூலம் திட்டமிட்டபடி அனைத்து முகாம்களையும் நடத்தி பொதுமக்கள் பயன் பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

நகர்பகுதிகளில் பட்டா கேட்டு வருகின்ற மனுக்களின் மீது சிறப்பு கவனம் செலுத்தி தீர்வு காணுமாறு, முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மாவட்டத்தில் இருந்து பரிந்துரைக்கப்பட்ட மனுக்களுக்கு பட்டா வழங்க மாநில அளவிலான குழு உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வருகின்றது. எனவே நிலுவையில் உள்ள மனுக்களுக்கு விரைந்து தீர்வு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அலுவலர்கள் உறுதி அளித்த கால வரையறைக்குள் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், கள ஆய்வு மேற்கொண்டும் வளர்ச்சித் திட்டப்பணிகளை உரிய காலத்திற்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்கின்றேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசு எவ்வளவுதான் மிகச் சிறப்பான திட்டங்களை தீட்டினாலும், அதன் பலன் மக்களுக்கு சென்று சேர வேண்டுமென்றால், கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அரசு அலுவலர்கள் நீங்கள் அரசுக்கும் மக்களுக்குமிடையில் பாலமாக செயல்பட வேண்டும்.

உங்களது சிறப்பான செயல்பாடுகள் மூலமாக அரசிற்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நல்ல பெயரை பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் மருத்துவர் ச.உமா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத், மாநகராட்சி துணை மேயர் ந. குணசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.